**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08012023-6279

Volume: 8

Issue: 1

Month: July

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 15.04.2023

Accepted: 06.06.2023

Published: 01.07.2023

Citation:
Vijayakumar, B. "The Origin of Neo-Vaishnavism and the Role of 'Satra" in the Development of Arts and Literature of Assam." *Shanlax International Journal of Tamil Research,* vol. 8, no. 1, 2023, pp. 26–34.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i1.6279

*Corresponding Author:
vijayakumar.ciil@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Origin of Neo-Vaishnavism and the Role of 'Satra" in the Development of Arts and Literature of Assam

**B. Vijayakumar**
*Asst. Professor, Department of Modern Indian Languages and Literary Studies*
*Gauhati University, Guwahati, Assam, India*
*https://orcid.org/0000-0002-9915-192X*

**Abstract**
The Bhakti movement popularly known in Assam is called Neo-Vaiṣṇavite movement, commenced by Śaṅkaradeva the great Vaiṣṇava saint and social reformer of Assam. The ideas, cultural contribution and philosophy of Srimanta Sankardeva became an integral part of the Assamese people. Sankaradeva was a multifaceted genius who gave a direction to the chaotic Assamese society by initiating a fresh approach to the existing Vaishnava religion that gave rise to a set of new values and aided in social synthesis. Vaishnavism has been constantly playing a significant role in the process of assimilating diverse elements- indigenous and non-indigenous into the Assamese culture. The Satra institution was the product of Neo-Vaishnavite movement which has played a vital role in Assamese society to spread communal harmony and brotherhood. Thus, Sri Sankardeva brought about a revolutionary change in Assamese society. Neo-Vaishnavism of Srimanta Sankaradeva became a powerful mechanism, and a cementing force in the process of acculturation of the different social groups. This paper is an attempt to study about the Neo-Vaishnavite movement as a great socio-cultural revolution in Assam and its impacts on the social life of the people of Assam.
**Key Words:** Neo-Vaishnavism, Socio-Cultural Revolution, Sankaradeva, Satra

**References**
1. Abul Hussain. 2021. *Contribution of Mahapurush Srimanta Sankardeva to Assamese Literature and Culture, International Journal of Innovative Technology and Exploring Engineering (IJITEE)* ISSN: 2278-3075 (online), 10(7), 66.
2. Devi Mridusmita. 2013. *Role Played by Satras in Social Cultural and Literary Aspects: Neo-vaishnavite Satras of Assam in 21st century*, Bimanhazarika (ed.) 269.
3. Faruk Ahmed. 2021. *Neo Vaishnavite Movement in Assam and Satra Institution: A Study*, International Journal for Multidisciplinary Educational Research, 10(7(5)), 55, ISSN: 2277-7881
4. Heerak Jyoti Nath. 2020. Neo-Vaishnavite movement and role of Satra and namghar in Assam: a historical analysis, international journal of creative research thoughts, Volume 8, Issue 3, ISSN: 23202882, Page. No. 190
5. Utpal Narayan Goswami, [2019], Origin, Development and Contribution of the Satrain Assam, Journal of Xi"an University of Architecture & Technology, ISSN: 1006-7930, Volume XI, Issue X, Page No.116.

# அசாமில் புதிய–வைணவ இயக்கத்தின் தோற்றமும், கலை இலக்கிய வளர்ச்சியில் “சத்ரா” வின் பங்கும்

*முனைவர் பா. விஜயகுமார்*
உதவிப்பேராசிரியர்
நவீன இந்திய மொழிகள் மற்றும் இலக்கியப் பயிலாய்வுத்துறை
குவகாத்திப்பல்கலைக்கழகம், குவகாத்தி, அசாம்

***ஆய்வுச் சுருக்கம்***
*அஸ்ஸாமில்பிரபலமாகஅறியப்பட்டபக்தி இயக்கம்நியோ–வைஷ்ணவ இயக்கம்என்றுஅழைக்கப்படுகிறது, இது வைஷ்ணவ துறவியும் சமூக சீர்திருத்தவாதியுமான ஸ்ரீமந்த சங்கரதேவாவால் தொடங்கப்பட்டது. இவர் ஒரு பன்முக மேதை ஆவார். ஸ்ரீமந்த சங்கரதேவாவின் கருத்துக்கள், தத்துவம் மற்றும் கலாச்சாரப் பங்களிப்பு ஆகியன அசாமிய மக்கள் வாழ்வின் ஒருங்கிணைந்த பகுதியாக பிற்காலத்தில் மாறியது. இவர் தற்போதுள்ள வைஷ்ணவ மதத்திற்கு அக்காலகட்த்தில் ஒரு புத்தொளியைப் பாய்ச்சினார். இது அசாமிய மக்களின் சமூக ஒருங்கிணைப்புக்குப் பெருமளவில் உதவியது. “சத்ரா” என்னும் வழிபாட்டு நிறுவனம் நவ-வைஷ்ணவ இயக்கத்தின் விளைபொருளாகும், இது நல்லிணக்கத்தையும் சகோதரத்துவத்தையும் இன்றளவும் பரப்புகிறது. ஸ்ரீ மந்த சங்கரதேவா அசாமிய சமுதாயத்தில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தினார். ஸ்ரீ மந்த சங்கரதேவரின் நவ-வைஷ்ணவம் ஒரு சக்திவாய்ந்த நெறிமுறையாகவும், பல்வேறு சமூக நன்னெறிக் கருத்துக்களை பரப்பும் குழுக்களை வளர்ப்பதில் ஒரு உறுதியான சக்தியாகவும் பின் நாட்களில் மாறியது. அஸ்ஸாமில் நியோ–வைஷ்ணவ இயக்கம் கண்ட சமூக–கலாச்சாரப் புரட்சி மற்றும் அஸ்ஸாம் மக்களின் சமூக வாழ்வில் அதன் தாக்கங்கள் ஆகியன பற்றி ஆய்வு செய்கிறது இக் கட்டுரை.*
***முக்கியச் சொற்கள்:*** *நவ–வைஷ்ண இயக்கம், சமூக–கலாச்சாரப் புரட்சி, சங்கரதேவா, சத்ரா*

## அறிமுகம்

வைணவம் தொன்மையானது. மாயோன் மேய காடுரை உலகமும், சேயோன் மேய மைவரை உலகமும்1(தொல்.அகத்.5) என்று தொல்காப்பியம் கூறுவதிலிருந்து மாயோன் என்னும் திருமாலின் வணக்கம் தொன்மையானது என்பதை புரிந்துகொள்ள முடியும். சங்க இலக்கியங்களிலும் திருமால் வணக்கம் பேசப்பட்டுள்ளது. தொல்காப்பியம் காட்டும் மாயோன் ஒரு எளிய வழிபாட்டையுடைய ஒரு முல்லை நிலக்கடவுள். இந்தியாவில் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு விதமாக வழிபடப்படும் வைணவ வழிபாடு சில புரட்சிகர சீர்திருத்தங்களையும் சமூகத்தில் புகுத்தியிருக்கிறது. அந்தவகையில் வட–கிழக்கு இந்திய மாநிலங்களில்ஒன்றான அசாம் மாநிலத்தில் வைணவ வழிபாட்டில் ஏற்பட்ட புரட்சியையும் அதனால் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும் ஆராய்கிறது இக்கட்டுரை.

கி.பி. 14, 15 ஆம் நூற்றாண்டு வாக்கில் இந்திய சமூகக் கட்டமைப்பில் சில இடங்களில் ஏற்றத்தாழ்வுகளும் சீரழிவுகளும் தலைதூக்கத் தொடங்கியது. மதத்தின் பெயரால் பல்வேறு சீர்கேடுகள் நடைபெற்றன. இத்தருணத்தில் தென் இந்தியாவில் சைவமும், வைணவமும் பெரிய அளவில் அதன் வளர்ச்சியை எட்டி இருந்தது. அசாமில் வைணவத்தை கடை பிடிப்பவர்களின் எண்ணிக்கை குறைவாகவும்,

சைவத்தின் ஒரு பிரிவான 'சாக்தம்'' என்ற சக்தி வழிபாட்டை கடைபிடிப்பவர்கள் அதிகமாகவும் இருந்தனர். அசாமிய மக்கள் தீவிர தாந்ரீகத்தை நம்புவர்களாகவும், விலங்கு மற்றும் மனித பலி, மந்திர சடங்குகள் போன்றதீயபழக்கங்களில்ஈடுபவர்களாகவும் இருந்து வந்தனர். இந்த காலகட்டத்தில், பெரியவர்; ஆன்மீகத் தலைவர்; சமூக சீர்திருத்தவாதி; நாடக ஆசிரியர்; பன்னிசையமைப்பாளர் என்றெல்லம் அசாமிய மக்களால் அழைக்கப்படுகின்ற ஸ்ரீமந்த சங்கரதேவா அசாமி சமூகத்தில் தோன்றினார். அவர் பன்முகத்தன்மை கொண்டவராக இருந்தார். இவர்வைணவசமயத்திற்குபுதிய நெறிகளை வகுத்து குழப்பமான அசாமிய சமுதாயத்தை சரிசெய்தார் எனலாம். அசாமிய கலாச்சாரத்தில் பூர்வீக மற்றும் நவீனகூறுகளை ஒருங்கிணைத்து 'சத்ரா'' என்ற புதிய வழிபாட்டு நிறுவனங்களை உருவாக்கினார். இது வைணவ நம்பிக்கையைப் பரப்பும் கருவியாக மட்டுமல்லாமல், வைணவத்தை நிலைநிறுத்தவும் நிலைப்படுத்தவும் உதவியது. இந்த புதிய-வைணவம் சங்கர தேவாவின் தத்துவத்துடன் புதிய கலாச்சார மரபுகளைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட தேசிய அடையாளத்தை மையமாகக் கொண்ட ஒரு புதிய கலாச்சாரம் அசாமில் தோன்றியது. பூர்வீக கலாச்சாரத்தை பாதுகாப்பதிலும் மேம்படுத்துவதிலும் 'சத்ரா'' என்ற வழிபாட்டு நிறுவனங்கள் இன்றளவும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இது வைணவத்தை அசாமிய சமூக மற்றும் கலாச்சார வாழ்வின் ஓர் அங்கமாக ஆக்கியது.

இந்து மதம் பல கிளைகளைக் கொண்டது. சிவனை முழுமுதற்கடவுளாகக் கொண்டு வழிபடுவது சைவம், திருமாலை அல்லது விஷ்னுவை முழுமுதற்கடவுளாகக் கொண்டு வழிபடுவது வைணவம் முருகனை முழுமுதற் கடவுளாகக்கொண்டு வழிபடுவது கௌமாரம், சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுவது சாக்தம் கணபதியை முழுமுதற்கடவுளாகக் கொண்டு வழிபடுவது காணபத்யம். இதில் 'வைணவம்'' இந்து மதத்தின் மிகப்பெரியதொரு கிளையாகும். அதன் பக்தர்கள் விஷ்ணுவை அல்லது அவருடைய அவதாரங்களில் ஒன்றினை வணங்குகிறார்கள். வைணவம் பல உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. இதனால் அவர்களின்நம்பிக்கைகள்வேறுபடுகின்றன. வைணவ நம்பிக்கைகள், பெருமளவில், வேதங்கள், உபநிடதங்கள், மற்றும் பகவத் கீதை ஆகியநூல்களை அடிப்படையாகக் கொண்டவை.

தமிழகத்தில் ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்களால் தோற்றுவிக்கப்பட்ட பக்தி இயக்கம் அதற்கு முன் இந்தியா முழுவதும் வியாபித்திருந்த புத்த, ஜைன மற்றும் இதர வழிபாட்டு முறைகளை முற்றிலும் துடைத்தெறிந்தது. இந்தியாவில் தோன்றிய புத்தமதம் இந்தியாவைத் தவிர மற்ற அண்டை நாடுகளில் செழிப்புற்று இருப்பதற்கு பக்தி இயக்கமே காரணம் எனலாம். பக்தி இயக்கத்தின் தாக்கம் அசாமில் இடைக்காலத்தில் ஏற்பட்டது. சங்கரதேவா அசாமில் இருந்து இந்த இயக்கத்தின் தலைமையை எடுத்துக் கொண்டார்.

### அசாமிய மக்களின் வழிபாட்டு பின்புலம்

அசாமிய மக்கள் பல்வேறு மொழி, கலை, கலாச்சாரங்களை கொண்ட பல இனக்குழுக்களின் கலவை ஆவர். அசாம் மாநிலத்தை பொருத்தளவில் ஒவ்வொரு இனக்குழுக்களுக்கென்றும் தனித்த பண்பாடு கலாச்சாரம் இருப்பினும் பெரும்பான்மை மக்களால் சைவ வழிபாட்டின் பகுதியாகிய சிவ வழிபாடும், சக்தி வழிபாடும் கடைபிடிக்கப்பட்டது. வைணவ வழிபாடு சங்கரதேவ் காலத்திற்கு முன் குறிப்பிடத்தக்க அளவில் பெரும்பான்மை மக்களால் கடைபிடிக்கப்படவில்லை.

**சிவ வழிபாடு**

பழங்காலத்தில் பர்மா நாட்டை ஒட்டியிருந்த இமயமலைப் பகுதிக்கு மேற்கிலுள்ள பகுதி காமரூபம் எனப்பட்டது. கி.பி. 5 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.12 ஆம் நூற்றாண்டு வரை இந்தகாமரூபாவில் சைவ வழிபாடு தழைத்திருந்தது. கி.பி.16 ஆம் நூற்றாண்டளவில் கொச் அரசர்கள் (kings of Koch) ஆட்சிக் காலத்தில் மக்கள் மத்தியில் பெரு நம்பிக்கையுடன் சைவம் இருந்தது. சங்கர தேவாவின் பெற்றோர்களும் சைவ வழிபாட்டாளர்களே. அஹோம் அரசர்களும் (Ahomkingdom) சிவனை வழிபடுவர்களுக்கு சில வழிபாட்டு மடங்களை அசாமிய சமூகத்திற்காக நிறுவிக்கொடுத்தனர். புராண காலத்திருந்து இன்றுவரை காமரூப பகுதிகளில்தான் சிவன் உறைவதாக இங்குள்ள மக்கள் நம்புகின்றனர். ஹாஜோ, விஸ்வநாத், சிங்காரி போன்ற பகுதிகளில் உள்ள சிவ வழிபாட்டு கோயில்கள் சிவன் 'யோகி சிவன்'' 'போகி சிவன்'' என இரண்டு வடிவங்களில் வழிபடப்படுகிறார்கள். சிவனை அடுத்து பெரும்பான்மையாக அசாமில் வழிபடப்படுவது 'சக்தி வழிபாடு''.

**சக்தி வழிபாடு**

புதிய வைணவத்தின் வருகை வரை சக்திவழிபாடு (சாக்தம்) ஒரு குறிப்பிடத்தக்க வழிபாட்டு முறையாக இருந்தது. உயர் குடியினரின் கட்டுப்பாட்டில் இருந்த இந்த வழிபாட்டிற்கு அஹோம் அரசர்களின் ஆதரவும் இருந்தது. சங்கர தேவாவும் மாதவ தேவாவும் சக்தியை வழிபடுபவர்களாக முன்னர் இருந்தனர். உலகப்புகழ் பெற்ற காமக்யா கோவிலினை (Kamakhya temple) மீள புதுப்பிக்கும்போது அசாமின் மேற்கு பகுதியில் ஆண்டு வந்த கொச் மன்னர் நரநாராயணன் கி.பி.1565 வாக்கில் உதவியிருக்கிறார்[2]. நிலங்களை தானமாக கொடுத்தும் இருக்கிறார். கொச் அரசர்களின் பிடித்த வழிபாடாக சாக்தம் இருந்தபோதும் பிற்காலத்தில் புதிய வைணவ மதத்தை ஏற்றுப் போற்றியுள்ளனர்.

பாம்பை தெய்வமாக வழிபாடும் மானசா வழிபாடு சக்தியின் வெளிப்பாடாக கருதப்படுகிறது. இது அசாமின் மேற்கு பகுதியில் பிரபலமான ஒன்று. சக்தியை சாந்தப்படுத்துவதற்காக, ஆடு, புறா, வாத்து போன்றன பலியிடப்படுகின்றன. மான்கர் என்பரால் இயற்றப்பட்ட 'பத்மபுராணமும்'' துர்கபாராவால் இயற்றப்பட்ட 'பியூலா உபக்யானாவும்'' பதினைந்தாம் நூண்றாண்டளவில் புதிய வைணவ இயக்க வருகைக்கு முன்னர் இந்த வழிபாட்டு முறை இருப்பதை உறுதிகூறுகிறது. தவிர, உக்ரதாரா, மங்கள் சாடி, சித்தேஸ்வரி, பைரவி, சாமுண்டா, புர்ஹி கோசானி போன்ற பல்வேறு பகுதிகளில் வெவ்வேறு இடங்களில் மானசா வழிபாடு இருந்து. இந்த காலகட்டத்தில்தான் சங்கரதேவா புதிய வைணவ இயக்கத்தின் 'சத்ரா'' வழிபாட்டு முறையை அசாமில் அறிமுகப்படுத்துகிறார்.

புதிய வைணவ வழிபாட்டு முறையில் 'சத்ரா'' என்பதற்கு வழிபாட்டு மடம் என்று பொருள். இதை வழிபாட்டு முறையை உருவாக்கிய சங்கரதேவாவின் வருகைக்கு முன்னர் அசாமில் வைணவ வழிபாட்டில் கலாச்சார ஒற்றுமை இல்லை. பின்னாளில் வந்த சத்ரா வழிபாட்டுமுறை பல்வேறு தரப்பு மக்களை ஈர்த்து ஒன்றிணைத்தது.

**சத்ரா (Satra)**

'சத்ரா'' என்ற சொல் வேதத்திலிருந்து தோன்றியதாகக் கூறுகின்றனர். இது ஒரு தியானமுறை[3]. ஆனால் புதிய வைணவ காலத்தில் இது ஒரு பக்தி நிறுவனம். அசாமில் முதல் 'சத்ரா'' கி.பி.1494 இல் போர்தோவாவில் சங்கரதேவாவால் நிறுவப்பட்டது. அதன் பிறகு மாதவ தேவா, தாமோதரதேவா, ஹரிதேவா, கோபால் தேவா ஆகியோர் பின்னாளில் இதை விரிவுபடுத்தினர். மாதவ்

தேவாவும் தாமோதரதேவாவும் இந்த நிறுவனத்திற்குப் புதிய கட்டமைப்பு ஏற்படுத்தினர். அதன்பிறகு அசாமின் பல்வேறு பகுதிகளில் நூற்றுக்கணக்கான சத்திரங்கள் நிறுவப்பட்டன. இதுவைணவம் தொடர்பான செய்திகளைப் பரிமாற பக்திமான்கள் கூடுகிற ஓர் இடம். சத்ரா என்பது ஓரளவு புத்த மடங்களை ஒத்தது. இந்த மடம் எப்போதும் சமூகத்தில் அமைதியான இடத்தில் அமைந்திருக்கும். சத்ரா என்பது மத விவகாரங்கள் மட்டுமே தொடர்புடையவை அல்ல. இது பன்முக நோக்கங்களைக் கொண்டது. வைணவக் கொள்கைகளை வளர்த்தல், சமூக சீர்திருத்தம், குடியிருப்பு பள்ளி, கலாச்சார ஊக்குவிப்பு எனப் பல நிலைகளில் இது இயங்கியது. அசாமில் அடிக்கடி நிகழும் வெள்ளப் பாதிப்பின்போது மக்கள் அடைக்கலம் கொள்ளும் இடமாகவும் இருந்து[4].

### சத்ராவின் அமைப்பு

சத்ராக்கள் பொதுவாக அமைதியான சூழலில் விசாலமான இயற்கை அழகுகொஞ்சும் இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும். சங்கரதேவ் மற்றும் மகாதேவ் ஆகியோரின் கால கட்டத்தில் பெரும்பாலும் நதியின் கரைகளில் அமைக்கப்பட்டிருந்தது. முழு சத்ரா அமைப்புமே பெரிய சுற்றுச்சுவரைக் கொண்ட இடத்தில் அமைக்கப்பட்டிருக்கும். இதில் நுழைவாயில், பிரார்த்தனை செய்வதற்கான இடம், கலை நிகழ்ச்சிகள் நடக்கும் இடம், சத்ராவோடு தொடர்புடைய மக்கள் தங்குவதற்கான இடம் ஆகியவை அமைந்திருக்கும். முற்காலத்தில் சத்ராக்கள் இன்றைய அமைப்புமுறை போன்று இல்லை. சங்கரதேவாவின் சீடர்கள் அமைந்திருந்த வழிபாட்டு இடத்தில் வழிபாடு முடிந்த பின்பு காட்டில் கிடக்கும் பழங்கள் பிரசாதமாக கொடுக்கப்பட்டது. 'சரித்புதி'' என்ற வரலற்றின் படி மகாதேவாவும் தாமோதரதேவாவும் இன்றைய சத்ராவின் அமைப்பை வடிவமைத்தனர்[5]. சத்ராவிற்கு நான்கு முக்கிய பாகங்கள் உண்டு.அவைநாம்ஹர், மணிகுட், பட்சரா, ஹத்திஎன்பனவாகும்.

### நாம்ஹர் (Namghar)

நாம்ஹர் என்பதற்குக் கீர்த்தன்கர் என்ற மற்றொரு வேறுபெயரும் உண்டு. 'நாம்'' என்பதற்குப் பிரார்த்தனை (prayer) என்றும், 'ஹர்'' எனபதற்குக் கூடம் (hall) என்றும் பெயர். இது ஒரு பெரிய பிரார்த்தனை கூடம். சத்ராவின் முக்கியமான நடவடிக்கைகள் அனைத்தும் இங்கு தான் நிகழும். பிரார்த்தனைக் கூடத்தின் அளவு ஒன்றும் வரையறுக்கப்பட்டவை அல்ல. பக்தர்களின் எண்ணிக்கையைப் பொருத்து அவை மாறும். இங்கு பக்கதர்கள் ஒன்றாகச் சேர்ந்து பிரார்த்தனைகள் செய்வது, சங்கர்தேவ் அளித்த பர்கீதத்தை (borgeet) பாடுவது, பாவ்னா (Bhaona) என்னும் நாடகத்தை நிகழ்த்துவது என அனைத்து நிகழ்வுகளும் இங்குதான் நிகழும். பக்திப் பாடல்களை பாடுவது, வைணவப் பிரசங்கம் செய்வதற்காக அசாமிய மக்களுக்காக இந்த நாம்கர் சங்கரதேவ அவர்களால் உருவாக்கப்பட்டது. இந்த நாம்கர்கள் அசாமிய சமுகத்தில் குறிப்பிடத்தகுந்த மாற்றத்தை கடந்த பல நூற்றாண்டுகளாக ஏற்படுத்தி வருகிறது. பார்பேட்டா மாவட்டத்தில் உள்ள ஒரு சத்ரா மூங்கிலைக் கொண்டும் மரத்தைக் கொண்டும் கட்டப்பட்டது. இது 220 அடி நீளத்தையும் 60 அடி அகலத்தையும் கொண்டது.

### மணிக்குட் (Manikut)

மணிக்குட் என்பது 'பாஜ்கர்'' என்றும் அழைக்கப்படுகிறது. இதன் பொருள் அலங்கரிக்கப்பட்ட வீடு என்பது. இதில் சிம்மாசனம் (Guru Asana), புனித நூல் ஆகியன வைக்கப்பட்டிருக்கும் அதைத் தவிர விலையுயர்ந்த பொருட்கள், பக்தர்களால் அளிக்கப்பட்ட மதிப்பு மிக்க காணிக்கைகள் இதனுள் வைக்கப்பட்டிருக்கும். நாம்ஹர்

போலல்லாமல் சிறிய வடிவிலான இந்த இடம் பக்தர்கள் அனைவரும் செல்லும் பகுதி அல்ல. மணிக்குட் ‘தேவகிரகா’’ (Debagriha) என்றும் அழைக்கப்படுகிறது. ‘தேவ்’’ என்பது கடவுளைக் குறிக்கிறது.

### பட்சரா (Batchara)

பட்சரா என்பது காராபட் என்றும் அழைக்கபடுகிறது. பட்சரா என்பது சத்ராவின் நுழைவாயில். பட்சரா என்பது இரண்டு வார்த்தைகளின் கூட்டு. பட் என்பதற்கு பாதை என்று பொருள். சரா என்பது சிறிய வீடு வடிவிலான நுழைவாயில். பக்தர்களையும், சிறப்பு விருந்தினர்களும் பட்சாரா என்ற இடத்தில் வரவேற்கப்படுகின்றனர்.

### ஹத்தி (Hati)

ஹத்தி என்பது பக்தர்கள் வசிக்கும் பகுதி. நாம்ஹர் மற்றும் மணிக்குட் ஆகியவற்றைச் சுற்றி இரண்டு அல்லது நான்கு வரிசைகள் கொண்ட குடியிருப்புகளாக இவை அமைக்கப்பட்டிருக்கும். பக்தர்களுக்கு அவர்களின் தேவையையும் தகுதியையும் பொறுத்து இரண்டு அல்லது மூன்று அறைகள் கொண்ட வீடுகள் ஒதுக்கப்படும். இங்கு தங்கும் பக்தர்களை சத்ரதிகார் என்பவர் அந்தந்த சத்ராவின் விதிகளுக்குட்பட்டு கவனித்துக் கொள்வார். சத்ரதிகார் என்பவர் சத்ராவில் முழுநேரம் தங்கி மத பிரசங்கம் செய்பவர் ஆவார். அவருக்குச் சில நிர்வாக அதிகாரங்களும் உண்டு.

### சத்ராக்களின் வகைகளும் பிரிவுகளும்

ஆரம்ப காலங்களில் அசாமில் உள்ள சத்ராக்கள் அனைத்தும் ஒரே வகையைச் சேர்ந்ததாக இருந்தது. பின்னர் அது நான்கு பிரிவுகளாக பிரிந்தைததைக் காணமுடிகிறது. முதல் வகை சத்ராக்கள் முழுவதும் துறவு நிலையைக் கடைபிடித்து. இரண்டாவது வகை இல்லறத்தில் இருந்து கொண்டு கடைபிடிக்கப்படும் தர்மங்களைக் கொண்டது. மூன்றாவது வகை சத்ரதிகார் மற்றும் துணை சத்ரதிகார் (தேகாசத்ரதிகார்) பிரம்மச்சரியத்தைக் கடைபிடித்துக்கொண்டு குடும்ப உறுப்பினர்களுடன் தொடர்பில் இருப்பது. நான்காவது, சத்ரதிகார் மற்றும் துணை சத்ரதிகார் திருமணம் செய்து கொண்டு இருப்பார், பக்தர்கள் பிரம்மச்சரியத்தைக் கடைபிடிப்பவர்களாகவும் பிரம்மச்சரியத்தைக் கடைபிடிக்காதவர்களாகவும் இருப்பர். இத்தகைய வாழ்வியல் முறைக்கு சத்ரிய கலாச்சாரம் என்று பெயர்.

சங்கரதேவாவின் மறைவிற்குப் பிறகு இந்த வழிபாட்டுமுறை நான்கு உட்பிரிவுகளாக பிரிந்தது. முதலில் மகாபுஷ்ய (Mahapurushiya) மற்றும் தாமோதர்யா (Damodariya) என்று இரண்டு பெரும் பிரிவுகளாகவும் பின்னர் அவை, பிரம்ம சங்கதி (Brahma Sanghati), நிகா சங்கதி (Nika Sanghati), புருஷ சங்கதி (Purusa Sanghati), கால சங்கதி (Kala Sanghati) என நான்கு சங்கதிகாளாக பிரிந்தது. இங்கு சங்கதி என்பது சங்கம் அல்லது அமைப்பு என்பதைக் குறிக்கிறது.

### பிரம்ம சங்கதி (Brahma Sanghati)

பிரம்ம சங்கதியைத் தோற்றுவித்தவர் தாமோதரதேவா ஆவார். தாமோதரதேவா சில வேத காலாச்சாரங்களையும், தத்துவங்களையும் இந்த வழிபாட்டில் புகுத்தினார். பின்னாளில் ஹரிதேவாவும் இவருடன் இணைந்துகொண்டார். இதில் பிராமணியத்தாக்கம் அதிகம் இருந்தது. அவுனியாத்தி சத்ரா, தெக்கினபாத் சத்ரா, கராமூர் சத்ரா ஆகியன பிரம்ம சங்கதி தாக்கம் பெற்ற சத்ராக்களாகும்.

### புருஷ சங்கதி (Purusa Sanghati)

புருஷசங்கதி புருஷோத்தம் தாகூர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. இவர் சங்கரதேவாவை மட்டுமே தலைமை குரு என்றும் மற்ற வைணவ குருமார்கள் அனைவரும் அவரின் பிரதிநிதிகள் மட்டுமே

என்று கூறினார். அவர் மாதவ் தேவாவை இரண்டாவது குருவாக ஏற்றுக் கொண்டார். பிரார்த்தனை செய்வதன் மூலமே கடவுளின் உன்னத சக்தியைப் பெற முடியும் என்று நம்பினார். மாதவ் தேவ் புருஷோத்தம் தாகூரை தனது அடுத்த வாரிசாக நியமித்த போதிலும் அவர் சங்கரதேவாவை மட்டுமே குருவாக ஏற்றுகொண்டார்.

### நிகா சங்கதி (Nika Sanghati)

நிகா என்றால் சுத்தம் என்று பொருள். இதுநிஷ்டசங்கதிஎன்றும்அழைக்கப்படுகிறது. மாதவ் தேவ் அவர்களின் மரணத்திற்குப் பிறகு பாதலா பத்மா அத்தா, மதுரா தாஸ் புர்ஹா அத்தா மற்றும் கேசப்சரன் அத்தா ஆகியோர்களால் இது தொடங்கப்பட்டது. இவர்கள் மூவரும் நிகா சங்கதியின் முதல் மூவராக கருதப்படுகின்றனர். இது, உடை, உணவு, நடத்தை ஆகியனவற்றில் கடுமையான ஒழுக்க விதிகளை வலியுறுத்தியது. மாதவ் தேவ் அவர்களை குருவாகவும் சங்கர தேவ் அவர்களை குருவின் குருவாகவும் இவர்கள் ஏற்றுகொண்டனர். பார்பேட்டா சத்ரா, கமலாபாரி சத்ரா ஆகிய புகழ்பெற்ற சத்ராக்கள் நிகா சங்கதியினுடையதாகும்.

### கால சங்கதி (Kala Sanghati)

‘கால’’ என்ற சொல் ‘கால்ஜர்’’ என்பதிலிருந்து வந்தது. பக்தர்கள் கால சங்கதியின்படி ‘குரு’’ வுக்கு உச்சமுக்கியத்துவம் கொடுத்தார். குரு என்பவர் கடவுள் போன்றவர். கலா சங்கதியின் பக்தர்கள் குருவை மனித உருவில் கடவுளாகப் பார்த்தார்கள்; பிரார்த்தித்தார்கள். ஆன்மீக ரீதியாகவும், சமூக ரீதியாகவும், மிகவும் வலுவாக அவர்கள் குருபாதத்தை நம்பினர். கலா சங்கதியின் நிறுவனர் கோபால் அத்தா, மாதவ் தேவாவின் பன்னிரெண்டு சீடர்களில் ஒருவர். கோபால்தேவா இறந்த பிறகு, ஸ்ரீ ராம் அத்தா கால்ஜர் சத்ராவின் சத்ராதிகாரராக பொறுப்பேற்றார். இந்த சங்கதி பழங்குடி மக்களுக்கு முன்னுரிமை அளித்தது. இந்த சங்கதியின் மிக முக்கியமான சத்திரங்கள் அஹத்குரி சத்ரா, மாயமர சத்ரா, திஹிங் சத்ரா, கஜல சத்ரா போன்றவை. சமூகத்தில் பின்தங்கிய மொரான், மொடாக் , கச்சாரி போன்றஇனக்குழுக்களுக்கு முன்னுரிமை அளித்து. அஹோம் அரசை பகைத்துக் கொண்டதால் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தாக கருதப்படுகிறது.

### கலை இலக்கிய வளர்ச்சியில் சத்ராவின் பங்கு

அசாமிய சமூக, நாகரிக வளர்ச்சிக்கு சத்ராவின் பங்களிப்பு முக்கியமானது. அசாமிய சமூகத்தின் கல்வி, ஒழுக்கம், நீதி, கலை இவற்றில் முக்கிய பங்காற்றி மேம்படுத்தியது. அசாமிய மொழி இலக்கிய வளர்ச்சியில் இதன் பங்கு அளவிடற்கரியது. சங்கரதேவாவின் மறைவிற்குப் பிறகு நிரைய சத்ரதிகார்கள் வைணவம் தொடர்பான நூல்களையும், சமூகத்தில் வைணவத்தின் முக்கியத்துவம் குறித்தும் பல்வேறு தலைப்புகளில் எழுதினர். அசாமிய கலாச்சாரத் துறையில் சத்ராவின் பங்களிப்பு மிக அதிகம். சாத்ரா சமூகத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் உயர்விலும், கல்வி, இசை, நடனம் மற்றும் நாடகம் ஆகியனவற்றைப் போற்றிப் பாதுகாப்பதிலும் இன்றளவும் தன் பங்கைச் செய்துவருகிறது.

இலக்கியம், பண்பாடு என அனைத்து அம்சங்களிலும் பங்களித்து வரும் சத்ரா இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் போன்றவர்களிடையே சமத்துவத்தை ஏற்படுத்தியதிலும் பெரும் பங்காற்றியது. சங்கரதேவா காலத்தில்தான் புதிய அசாமிய சமுதாயத்தின் உருவாக்கம் தொடங்கியது எனலாம்.

இசை, நடனம், சிற்பம், கலை மற்றும் கைவினை போன்றவற்றில் அறிவையும் புலமையையும் சத்ரா வழங்குகிறது. தார்மீக வாழ்வியல் நெறிமுறைகளைப் பராமரித்தது

ஒழுங்கீனச் செயல்பாடுகளைச் சமூகத்தில் களைய பாடுபடுகிறது. அசாமிய கிராமங்களின் குறைகள் இங்கு சில முக்கியமானவர்களின் உதவியுடன் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட்டு சமூகக் குற்றங்கள் தடுக்கப்படுகிறது. ஒற்றுமை, பரஸ்பர புரிதல், ஒத்துழைப்பின் முக்கியத்துவம் ஆகியவற்றின் உணர்வை சத்ரா உருவாக்குகிறது.

இசை, நடனம், கவிதை, பாவ்னா நாடகம், சிற்ப வேலைப்பாடு போன்ற பல்வேறு கலாச்சார நடவடிக்கைகளின் இடமாகவும் சத்ரா விளங்குகிறது. அசாமின் செவ்வியல் நடனமான சத்ரியா நடனம் மற்றும் பாவ்னா ஆகியவை சத்ராக்களினால் இன்றளவும் உயிருடன் இயங்குகிறது. நடனம் மற்றும் நடிப்பு ஆகியவை சாத்திரங்களின் மிக முக்கியமான அங்கங்களாகும். சத்ரிய கலாச்சாரத்தில் முக்கியமானது சத்ரியா நடனம் ஆகும். இது இந்திய அரசால் செவ்வியல் நடனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஓவியக் கலாச்சாரம் மற்றும் முகமூடி (mask) செய்யும் கலாச்சாரம் சத்ராவின் பிரபலமான கலாச்சாரம் ஆகும். இவை வைணவ விழாக்களில் நடனத்தின் போது பயன்படுத்தப்படுகிறது.

**கவிதை, உரை, நாடகம், பாட்டு**

சங்கரதேவ் ஒரு ஆன்மீக சீர்திருத்தவாதி என்பதைவிடவும் அவர் ஒரு சிறந்த இலக்கியவாதியாக பல நேரங்களில் வெளிப்பட்டார். இவர் படைப்புகளின் முக்கிய நோக்கம் வைணவ மதத்தைப் பரப்புவது விஷ்னுவை அனைவரின் மனங்களிலும் அமரச்செய்வது. கீர்த்தன்-கோசா, ஹரிச்சந்திருபயனா, ருக்மிணிஹரணா, அஜாமில் ஓபக்யானா, பாலிச்சலோனா, குருக்ஷேத்ரா யாத்ரா, கோபி உத்தவ சம்வதா ஆகியவை சங்கரதேவாவின் படைப்புகள் ஆகும். பிரதீபா, அனாதி படோானா, நிமி நவரிதா சம்வதா, பக்தி ரத்னாகர், குணமாலா ஆகியன பக்தியை பரப்ப எழுதப்பட்ட உரைகள். அதோடு மட்டுமல்லாமல் சமஸ்கிருதத்திலிருந்து பாகவத புராணத்தையும் அசாமியில் மொழிபெயர்த்து வழங்கினார்.

அங்கியநாட் என்னும் புதியவகை நாடகத்தை அறிமுகப்படுத்தினார். இது ஒரு தனித்துவமான நாடகம். இந்த நாடகம் உரையாடல்கள், பாடல்கள், ஸ்லோகங்கள், ஆகியனவற்றை உள்ளடக்கியிருக்கும். சீன யாத்திரை, பத்னி பிரசாத், பாரிஜாத் ஹரணா, கலியா தாமன், ருக்மணி ஹரன், கேலி கோபால், ராம் விஜோயா போன்ற நாடகங்கள் சங்கரதேவ் அவர்களால் எழுதப்பட்டவையாகும்.

சங்கரதேவ் அவர்களாலும், மாதவ்தேவ் அவர்களாலும் எழுதப்பட்ட பாடல்கள் அனைத்தும் 'பொர்கீத்'' (borgeet) என்று அழைக்கப்படுகின்றன. இந்த பாடல்களுக்கு அசாமிய சமூகத்தில் பெருமதிப்பு உண்டு. தேர்ந்தெடுக்கப்பட்ட வார்த்தைக் கோர்ப்பும், மனதை மயக்கும் இசை வடிவமும் கேட்பவர்களைப் பக்திபரவச நிலைக்கு எடுத்துச்செல்லும் வகையில் அமைந்திருக்கும். இவர் எழுதிய 240 பாடல்களில் 34 பாடல்கள் மட்டுமே இன்று கிடைக்கின்றது[6].

**முடிவுரை**

அசாமில் புதிய வைணவ இயக்கத்தை அறிமுகப்படுத்திய சங்கரதேவ் அசாமில் சமூக கலாச்சார புரட்சியை ஏற்படுத்திய ஒரு பல்துறை மேதை ஆவார். அசாமியர்களின் அடையாளம் சங்கரதேவால் தொடங்கப்பட்டது எனலாம். கடவுள் ஒன்றே என்பது இவரது கொள்கை. இருப்பினும் இவர் சிலை வழிபாட்டாளர் அல்ல. இவர் தொடங்கிய இயக்கம் 'ஏகசரன் நாம தர்மம்'' அல்லது மஹாபுஷ்ய தர்மம் என்று அறியப்படுகிறது. இந்த இயக்கம் பக்தி வழிபாட்டின் செய்தியை மக்களிடம் பரப்பி, தீண்டாமை ஏற்றத்தாழ்வுகளை அழித்து ஒரு புதிய சமூக அமைப்பை நிறுவுவதை

நோக்கமாகக் கொண்டது. மத நல்லிணக்கத்தையும் சகோதரத்துவத்தையும் பரப்பி அசாமிய சமூகத்தில் ஒரு புரட்சிகர மாற்றத்தை இந்த இயக்கம் தோன்றுவித்தது. அசாமிய சமூக, நாகரிக வளர்ச்சிக்கு சத்ராவின் பங்களிப்பு முக்கியமானது. சாத்ரா சமூகத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் உயர்விலும், கல்வி, இசை, நடனம் மற்றும் நாடகம் ஆகியனவற்றைப் போற்றிப் பாதுகாப்பதிலும் இன்றளவும் தன் பங்கைச் செய்துவருகிறது.

## சான்றெண் விளக்கம்

1. புலியூர்க்கேசிகன் உரை தொல்காப்பியம் - அகத்திணையியல், பாடல் 5.